# வலயக் கல்வி அலுவலகம்
# மன்னார்

## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை - 3
## வினாப்பத்திரம் - II

**சுட்டெண் :- ............................** **நேரம்:- 1. 15 மணித்தியாலம்**

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள் :-

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ள இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் உள்ள குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலே எழுதுக.
- விடைகள் எழதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது சரியான விடையைத் தெரிவு, அதன் கீழே கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| 09 | |
| 10 | |
| இறுதிப் புள்ளி | |
| எழுத்தில் | |
| இலக்கத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் ( வகுப்பாசிரியர் ) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற் விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | ........................ பெயர் ......................... ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் ( ................................ ) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ...................... பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப் படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப் படுத்துகின்றேன். | ...................... பெயர் ..................... ஒப்பம் |
| அதிபர் , மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

**1)** தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பின்வரும் பந்தியை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

நீர்நிலைகளில் கைவிடப்படும் பிளாஸ்டிக் , பொலித்தீன்களால் நீர் மாசுபடுவதுடன் நீரோட்டமும் தடைப்படுகிறது. இதனால் நோய்கள் பரவுகின்றன. பொலித்தீன் , பிளாஸ்டிக் கழிவுகளை எரிக்கும் போது வெளிவரும் புகையானது வளிமண்டலத்தை மாசுபடுத்துகின்றது. இதனால் ஓசோன் படை அழிவடைந்து சூரியனிலிருந்து புறஊதாக்கதிர்கள் பூமியை வந்தடைகின்றன. இது உயிரினங்களை அழிவுக்கு உள்ளாக்குகின்றது. இவற்றின் பாவனையைக் குறைப்பதனால் சூழல்பிரச்சினைகளைத் தவிர்ப்பதோடு உயிரினங்களின் அழிவையும் தடுக்கலாம். இதற்கு மாற்றீடாக சூழலுக்குத் தீங்கற்ற வாழை இலை , கமுகம் தடல் , மட்பாத்திரங்கள் , மரத்தால் செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தலாம். பொலித்தீன் , பிளாஸ்டிக் பாவனையை இயலுமானவரை தவிர்க்கும் போது சூழல் தூய்மையாகவும் பசுமையாகவும் காணப்படும்.

1. எவற்றின் பாவனை சூழலை மாசுபடுத்துகிறது ? …………………………………………………………..
2. ஓசோன்படை ஏன் அழிவடைகிறது ? ……………………………………………………………………
3. இதற்குத் தீர்வு என்ன ? ……………………………………………………………………………...
4. தூய்மை என்பதன் எதிரக்கருத்துச்சொல் என்ன? ………………………………………………………
5. பொலித்தீன் , பிளாஸ்டிக் பாவனைக்கு மாற்றீடாக எவற்றைப் பயன்படுத்தலாம்?

   ………………………………………………………………………………………………………
6. பொருத்தமான தலைப்பு இடுக. ……………………………………………………………………

**2)** பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக்கி எழுதுக.

விளையாட்டு வீரன் மைதானத்திற்குச் சென்றான்.

வீரன் மைதானத்தில் விளையாடினான்

………………………………………………………………………………………………………

**3)** கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமொன்றை அமைக்குக.

வளர்ந்த / பற்றிப்படர்வதற்கு / செழித்து / முல்லைக்கொடி / தவித்தது / கொழுகொம்பின்றித்

………………………………………………………………………………………………………

**4)** பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக்கி எழுதுக

I. என்ர புத்தகம் புதியது.

………………………………………………………………………………………………………..

II. அவள் பென்சில் வேண்டினாள்.

………………………………………………………………………………………………………..

**5)** பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

| |
|---|
| அரசே என்னே உன்கொடை உன்னை எப்படிப் புகழ்வது |

**சுட்டெண்** :- …………………………..

**6)** பின்வரும் ஒவ்வொரு கருத்தினையும் உணர்த்தும் பொருத்தமான மரபுத் தொடரினைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

I. பதற்றக்காரன் :- ………………………………………………………………

II. எதிர்த்துப் போராடுதல் :- ………………………………………………………………

**7)** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் , பயனிலைத் தொடர்பு சரியாயின் **" சரி "** எனவும் பிழையாயின் **" பிழை "** எனவும் அடையாளமிடுக.

I. நாங்கள் கல்விச் சுற்றுலா சென்றேன். ( )
II. மான்கள் கூட்டம் காட்டில் துள்ளிக் குதித்து ஓடியது ( )
III. நாம் தினமும் பத்திரிகை வாசிப்போம் ( )
IV. சிறிய பூச்சிகள் தூய்மையான தேனை உறிஞ்சிக் குடித்தன. ( )

**8)** பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான கருத்தை எழுதுக.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து

……………………………………………………………………………………………..

**9)** பின்வரும் ஒருமை வாக்கியங்களை நிகழ்காலப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

குரங்கு மரத்திற்கு மரம் தாவித் திரிந்தது.

………………………………………………………………………………………

**10)** பின்வரும் வாக்கியங்களில் உள்ள அடைமொழிகளின் கீழ் கோடிடுக.

1. வெள்ளைத் தாமரை மலர்கள் மலர்ந்திருந்தன.

2. திறமையான சிறுவன் பாடலை இனிமையாகப் பாடினான்.

**11)** தரப்பட்டுள்ள படங்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1.  ………………………. 2.  ………………………………

**12)** ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

1. Stars :- ……………………………….. 2. Hospital :- ……………………………………….

**13)** கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1. watering / I / the / am / plants ………………………………………………………………..
2. am / closing / bag / I ……………………………………………………………….

**14)** “ ஹூனுகூர ” எனும் சிங்களச் சொல்லுக்கான தமிழ்ச் சொல்லை எழுதுக.

……………………………………………………………………………………………………….

**15)** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.

எனக்கு பாடம் சொல்லித் தாருங்கள்

…………………………………………………………………………………………………….

**16)** முப்பதாயிரத்து நானூற்று இருபத்தைந்து என்னும் எண்ணிலிருந்து இரண்டைக் கழிக்கும் போது கிடைக்கும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.


……………………………………………………………………………………………………..

**17)**

| |
|---|
| 5306 , 5630 |
| 5603 , 5063 |

கட்டத்தில் தரப்பட்டுள்ள எண்ணை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

……………… , ……………… , ……………… , ………………………..

**18)** 

கட்டத்தில் உள்ள உருக்களின் எண்ணிக்கையை உரோமன் எண் குறியில் தருக.

……………………………………………………………………….

**19)** தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் எழுதுக.



………………………………………………………

**20)** விவசாயி ஒருவர் 675 நெல் மூட்டைகளை ஒருவருக்கு 5 எனப் பங்கிட்டார் , எனின் எத்தனை பேருக்கு நெல் மூட்டைகளைப் பங்கிடலாம்?

……………………………………………………………………………………………………….

**21) ஏப்ரல் மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட ஆடைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**

| **ஆடை வகை** | **A** | **B** | **C** |
|---|---|---|---|
| **எண்ணிக்கை** | **2765** | **1850** | **1420** |

I. ஏப்ரல் மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட ஆடை வகை A , C என்பவற்றின் மொத்த எண்ணிக்கை யாது? ………………………………………………………………………..

II. ஆடை வகை Bயை விட ஆடை வகை A எவ்வளவு கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளது?

……………………………………………………………………………………………..

**22)** ஓர் கடதாசி உறை ஒன்றினால் 8 புத்தகங்களுக்கு உறை போட முடியும். எனவே 50 புத்தகங்களுக்கு உறை போட எத்தனை முழு உறைகள் தேவைப்படும்?

……………………………………………………………………………………………

**23)** கண்ணனின் பயணப்பொதி 13500g நிறையுடையதாக இருந்தது. குமரனின் பயணப்பொதி கண்ணனின் பயணப்பொதி போல 2 மடங்கிற்கு 3kg குறைவாக இருந்ததெனில் குமரனின் பயணப்பொதியின் நிறை யாது?

………………………………………………………………………………………………..

**24)** பி.ப 6.20 இற்குப் படிக்கத் தொடங்கிய குமார் 2 மணித்தியாலங்கள் 25 நிமிடங்களின் பின்னர் படிப்பை நிறுத்தினான். அவன் படிப்பை நிறுத்திய நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கத்தில் எழுதுக.

………………………………………………………………………………………………..

**25)** 10m நீளமான கம்பித்துண்டொன்றை 1m 25cm நீளமான எத்தனை கம்பித்துண்டுகளாக வெட்டலாம்?


……………………………………………………………………………………………

**26)** விலைப்பட்டியலைப் பார்த்து சிட்டையைப் பூர்த்தி செய்க.

| காய்கறி வகை | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| கரட் | 1kg | 90 | 00 |
| பீட்ரூட் | 1kg | 70 | 00 |
| முள்ளங்கி | 1kg | 100 | 00 |
| தக்காளி | 1kg | 110 | 00 |

| | காய்கறிவகை | அளவு | விலை | |
|---|---|---|---|---|
| | | | ரூபாய் | சதம் |
| i | கரட் | 500g | 45 | 00 |
| ii | முள்ளங்கி | 250g | ……… | ……… |
| iii | தக்காளி | 500g | ……… | ……… |
| iv | பீட்ரூட் | 2kg | ……… | ……… |
| | மொத்தப் பணம் | | ……………………… | |


27)




□ இவ்வுருவின் நிறை யாது?

..............................................................


28)



உருவில் காட்டியவாறு விரித்துப் பெறப்பட்ட திண்ம உருவின் பெயர் யாது?

...........................................................................................................

29)




இவ்வுருவில் எத்தனை சமச்சீர் கோடுகள் வரையலாம்?

...........................................................................................................

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சாதாரண உலர் மின்கலத்தின் வோல்ட் அளவு

1. 2.5 V    2. 1.5 V    3. 5 V

31)  இவ் அடிப்படைத் தையலின் பெயர்

1. விஸ்பம் தையல்    2. சோம் தையல்    3. கம்பளித் தையல்

32) பின்வருவனவற்றுள் எதனால் சூழல் அதிகமாக மாசடைகிறது.

1. ஞாயிற்றுக்கலங்கள் மூலம் மின்சக்தி பெறும் போது
2. மாட்டுவண்டி , துவிச்சக்கரவண்டி என்பவற்றைப் பயன்படுத்தும் போது
3. நிலக்கரி மூலம் அனல் மின்சக்தி நிலையம் இயங்கும் போது

33) சூரியஒளி மூலம் கிடைக்கும் வெப்பத்தினால் நீர் ஆவியாகுதல் பயன்படும் சந்தர்ப்பம்,

1. பழங்களிலிருந்து ஜாமைத் தயாரித்தல்.
2. மீனிலிருந்து கருவாட்டைத் தயாரித்தல்.
3. பசுப்பாலிலிருந்து வெண்ணெய் தயாரித்தல்.

34) தாவர வகையை மாத்திரம் உண்ணும் பிராணியையும் மாமிச வகையை மாத்திரம் உண்ணும் பிராணியையும் ஒழுங்குமுறைப்படி குறிப்பிடும் விடை,

1. புலி , கோழி 2. நரி , காகம் 3. மாடு , சிங்கம்


35) கிழக்கு மாகாணத்தினுள் அடங்கும் மாவட்டங்களை மட்டும் உள்ளடக்கிய விடை,

1. திருகோணமலை , மன்னார் , மட்டக்களப்பு
2. அம்பாறை , மாத்தளை , திருகோணமலை
3. திருகோணமலை , அம்பாறை , மட்டக்களப்பு


36) “ எல்லாவற்றிலும் என்னால் வெற்றி பெற முடியும் ” என்னும் எண்ணம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும்.

1. மூன்றாம் படிமுறை 2. நான்காம் படிமுறை 3. ஐந்தாம் படிமுறை

37) ஒரு தாவரத்தின் கிளையொன்றினை பொலித்தீனால் கட்டி சிறிது நேரத்தின் பின் அவதானிக்கும்போது தாவரத்தில் நிகழ்ந்திருக்கும் மாற்றம் என்ன?



1. தாவரம் வாடிப் போயிருக்கும்
2. பொலித்தீனால் மூடப்பட்ட பகுதியில் நீர்த்துளிகள் காணப்படும்
3. தாவரம் முழுமையாக மஞ்சள் நிறமாகக் காணப்படும்.

38) 

உருவிலுள்ளது போன்று காந்தம் ஒன்றில் முனைவுப் பகுதி குண்டூசிகளைக் அதிகம் கவருவதற்கான பிரதான காரணம்,


1. குண்டூசிகள் சுற்றிவரப் பற்றிப்பிடிப்பதனால்
2. நடுப்பகுதியை விரல்களினால் பிடிப்பதனால்
3. முனைவுப் பகுதிகளில் காந்த வலிமை அதிகமாக இருப்பதனால்

39) இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ,


1. J.R ஜெயவர்தன 2. D.S சேனாநாயக்க 3. மைத்திரிபால சிறிசேன

40) ஊசித்துளை கமராவில் விம்பம் தென்படுவது,

1. நேராக 2. தலைகீழாக 3. சரிவாக



41) இப்பரிசோதனையின் மூலம் விளங்கிக் கொள்வது ,




1. வளிக்கு நிறை உண்டு
2. வளி இடத்தைப் பிடிக்கும்.
3. பலூன் விரிவடைகிறது.

**42)** நீருக்கு இருக்கக் கூடிய ஒரு இயல்பாக அமையாதது ,

1. நிலையான வடிவம் இருத்தல்
2. மணம் இல்லாதிருத்தல்
3. வெப்பமாக்கும் போது நீராவி வெளியேறல்

**43)** அரச இலச்சினையில் ஆங்கில எழுத்தினால் காட்டப்படுவது,

1. தர்மச்சக்கரம் , நெற்கதிர்
2. தர்மச்சக்கரம் , நிறைகலசம்
3. நெற்கதிர் , பூவிதழ்





**44)** படத்தில் காணப்படும் குறியீடு உணர்த்தும் கருத்தும் ,

1. அபாயம்
2. ஆழம் கூடிய இடம்
3. நச்சுத்தன்மை



**45)**



இப்பரிசோதனையின் மூலம் விளங்கிக் கொள்வது ,

1. காற்றடைக்கப்பட்ட குவளையை நீரினுள் வைத்து போத்தலை சரிக்கும் போது நீர்க்குமிழிகள் வெளியேறும்.
2. குவளையினுள் காணப்படும் நீரை பாத்திரத்தினுள் ஊற்றுதல்.
3. இரு குவளையினுள்ளும் நீரை நிரப்புதல்

**46)** உணவு உண்ணும் போது கடைபிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று,

1. உணவு உண்ணும் போது அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு உண்ணுதல்.
2. மற்றையவர்களின் உணவுப் பாத்திரங்களை எட்டிப் பார்த்தல்.
3. உணவை விழுங்குவதற்கு முன் போதியளவு உணவை மெல்லுதல்.

**47)** எமது உடலில் உள்ள நீர் வெளியேறும் சந்தர்ப்பம்.

1. உட்சுவாசம் 2. வெளிச்சுவாசம் 3. உறங்கும் போது

**48)** தொற்று நோய்கள் தொற்றுதலைத் தடுப்பதற்கு எம்மால் செய்யக்கூடிய செயலாக அமைவது,

1. இருமல் , தும்மல் ஆகியன ஏற்படும் போது வாயையும் மூக்கையும் மறைத்துக் கொள்ளல்.
2. விரைவாக வைத்திய சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளல்.
3. மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களுக்குச் செல்லுதல்.

**49)** நீண்ட நாக்கைப் பயன்படுத்தி இரையைப் பிடிக்கும் பிராணிகளை மட்டும் கொண்ட விடை,

1. ஆமை , குரங்கு , பல்லி 2. தவளை , பாம்பு , பல்லி 3. தேனீ , வௌவால் , ஈசல்

**50)** அப்பா குடிப்பதற்காக கடையொன்றிலிருந்த பானவகையொன்றை கொள்வனவு செய்தார். அதன் லேபலில் மஞ்சள் நிற வட்டமொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால் கருதப்படுவது,

1. சினி அதிக அளவில் உள்ளது என்பதாகும்.
2. சீனி குறைந்த அளவில் உள்ளது என்பதாகும்.
3. சீனி நடுத்தர அளவில் உள்ளது என்பதாகும்.

**51)** பொது வாகனமொன்றில் பயணம் செய்யும் போது செய்யக் கூடாத செயல் எது?

1. கர்ப்பிணித் தாய்மாருக்கு ஆசனத்தை வழங்குதல்
2. பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்ளல்
3. மிதிபலகையில் பயணித்தல்

**52)** நூலகம் ஒன்றினுள் காட்டக் கூடிய சரியான நடத்தை,

1. சத்தமாகப் பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்.
2. வாசித்த பின் புத்தகங்களைக் குறித்த இடங்களில் வைத்தல்
3. வாசிக்கும் புத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடுதல்.

**53)** வீதிச் சமிக்ஞை விளக்குகளின் தூணில் சிவப்பு நிற மின்குமிழ் எரியும் போது அதனால் கருதப்படுவது,

1. “ வாகனத்தை நிறுத்துக ” என்பதாகும்.
2. “ வாகனம் பயணிப்பதற்கு ஆயத்தமாகுக ” என்பதாகும்.
3. “ வாகனம் பயணிக்குக ” என்பதாகும்.

**54)** வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு மிகப் பொருத்தமான உதவி,

1. சமையற் பாத்திரங்களை வழங்குதல்
2. உலர் உணவுப் பொருட்களை வழங்குதல்.
3. சமைத்த உணவு வழங்குதல்

**55)** நீர்நிலை ஒன்றினுள் தவறி விழுந்த ஒருவரைக் காப்பாற்றுவதற்காக எம்மால் உடனடியாகச் செய்யக் கூடிய உதவி,

1. நாமும் அந்த நீர்நிலையில் குதித்தல்
2. கூக்குரலிட்டு அயலவர்களை அழைத்தல்
3. நீர்நிலையை உற்று நோக்கியவாறு மௌனமாக இருத்தல்

**56)** ஆசிரியை பிரியா நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி ஒன்றின் மீது நீர்த்துளி ஒன்றை இட்டார். அதன் போது நிகழக்கூடியது,

1. நீர் மெதுவாக சூடாகும் , நிறம் மாறும்
2. ஒலி எழும் , நீர் ஆவியாகும்.
3. நீர் படிப்படியாகக் குறையும் , நிறம் மாறாது

**57)** நோய்க்காவி நுளம்புகள் மூலம் பரவலடையும் நோய்களின் கூட்டம்,

1. டெங்கு , சிக்குன்குனியா , மலேரியா , யானைக்கால்
2. கொரோனா , பிளேக் , நீர்வெறுப்பு , சீதபேதி
3. நெருப்புக்காய்ச்சல் , கண்டமாலை , ஸ்கேவி , பெரிபெரி

**58)** வறண்ட பிரதேசத்தில் அதிகமாக வளரும் தாவரம்,

1. தேயிலை     2. நாகதாளி     3. பலா

**59)** வைத்தியரினால் நோயாளிக்கு வழங்கப்படும் மருந்தினைக் குடிக்க முன்பு அவதானிக்க வேண்டிய விடயம்,

1. மருந்து உற்பத்தி செய்த இடம்
2. ஒருவேளைக்கு எடுக்க வேண்டிய மருந்தின் அளவு
3. மருந்தில் உள்ளடங்கிய பொருட்கள்

**60)** “ வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும் ” ஆகவே மாணவர்களாகிய நாம் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய் , பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும். )

- ............................................................................................................
............................................................................................................
............................................................................................................
- ............................................................................................................
............................................................................................................
............................................................................................................
- ............................................................................................................
............................................................................................................
............................................................................................................